**10.09.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

**07.09.2020 முதல் மெட்ரோ இரயில் சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டதிலிருந்து நேற்று (09.09.2020) வரை 24,354 பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்**

விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து வண்ணாரப்பேட்டை வரை செல்லும் நீல வழித்தடத்தில் சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் 07.09.2020 முதல் துவங்கியது. இதனைத் தொடர்ந்து பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ செல்லும் பச்சை வழித்தடத்தில் மெட்ரோ இரயில் சேவைகள் நேற்று (09.09.2020) காலை 07.00 மணி முதல் துவங்கியது.

பல்வேறு தரப்பினரிடமிருந்து வந்த கோரிக்கைகளை கருத்தில் கொண்டு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் சேவைகளை இன்று (10.09.2020) முதல் தினந்தோறும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை நீட்டித்துள்ளது.

புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையம் மற்றும் புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக விமான நிலைய மெட்ரோ வரை அடுத்தடுத்து செல்லும் வகையில் மெட்ரோ இரயில் சேவைகள் இன்று (10.09.2020) முதல் தொடங்கப்பட்டுள்ளன.

07.09.2020 முதல் கடந்த மூன்று நாட்களில் மொத்தம் 24,354 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர். நேற்று (09.09.2020) வரை, திறன் அட்டை பயணச்சீட்டு (Smart Card Ticketing System) முறையைப் பயன்படுத்தி 18,769 பயணிகள் மற்றும் க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 637 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர்.

நேற்று (09-09-2020) மட்டும் மெட்ரோ இரயிலில் மொத்தம் 13,980 பயணிகள் பயணம் செய்துள்ளனர். திறன் அட்டை பயணச்சீட்டு (Smart Card Ticketing System) முறையைப் பயன்படுத்தி 11,091 பயணிகள் மற்றும் க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 325 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர்.

பயணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்து க்யூஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையை பயன்படுத்திக்கொள்ளலாம். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணிகள் டிக்கெட் கவுண்டர்கள் மற்றும் பயணச்சீட்டு வழங்கும் கருவிகளுக்கு (Ticket Vernding Machine) முன்னால் நீண்ட வரிசையில் நிற்பதைத் தவிர்ப்பதற்காக அதி நவீன தானியங்கி பயணச்சீட்டு சான்றளிக்கும் இயந்திரங்களை (Travel Card Reader) அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் நிறுவி உள்ளது. ஒரு வழிப் பயண டோக்கன்கள் வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன, இருப்பினும் தவிர்க்கமுடியாத நிலையில் தேவையின் அடிப்படையில் சுத்திகரிக்கப்பட்டு டோக்கன்கள் வழங்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அனைத்து சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலையங்களிலும் குளிர்சாதன வசதிகளை பாதுகாப்புடன் இயக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் பெட்டிகளிலும் மெட்ரோ இரயில் நிலையங்களிலும் கொரோனா பரவலை தடுத்திடும் வகையில் 100% பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மேற்கொண்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பின்பற்றி தனிமனித இடைவெளியை கடைபிடித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.